# அனுமதிப் பத்திரத்துடன் சென்றாலும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 67

யாழ்ப்பாணம் சித்திரை 7 ஸபர் 23 செவ்வாய்க்கிழமை (20-4-71)

## என்னசெய்ய வேண்டும்?

கோட்டை, செவ்.

ஊரடங்குச் சட்ட நேரத்தில் பொது வீதியில் எவராவது நிற்க நேர்ந்தால் அனுமதிப் பத்திரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் காவற் படையினரைக் கண்டவுடனே தமது கைகளை மேலே தூக்கிக் கொள்ள வேண்டும் என்று இராணுவ தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

அறிவித்தலில் மேலும் குறிப்பிட்டுள்ளவை:

காவல்படையினரைக் கண்டால் எவரும் ஓடக் கூடாது, அவர்கள் சாதாரணமாக நடந்து வருதல் வேண்டும். காவல் படையினர் முன் சட்டைப் பைக்கற்றுகளில் கையைப் போடுதல் கூடாது.

காரில் அனுமதிப்பத்திரத்துடன் வீதியில வருபவர்கள் இராணுவத்தினரைக் கண்டால் வெளி வெளிச்சத்தை நிறுத்தி காரின் உள்வெளிச்சத்தை போட்டுவிட்டு வெளியில் வந்து கைகளை மேலே உயர்த்த வேண்டும்.

### பிரசவப் பெண்களுக்கு வசதி

பிரவசகாலம் நெருங்கியுள்ள கர்ப்பிணிகளை வைத்திய விடுதியில் சேர்க்க வேண்டுமானல் முன்னராகவே பொலிஸ் பகுதியினருடன் தொடர்புகொண்டு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# ஹிங்குராகொடையில் 12 பயங்கரவாதிகள் மாண்டனர்

## பலர் காயம்; சிலர் கைது

கோட்டை, திங்கள்

ஹிங்குராக் கொடையில் நேற்று கடற்படையினர் பயங்கரவாதிகள் மீது நடத்திய எதிர்த் தாக்குதலில் 12 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் இச் சம்பவத்தின் போது 7 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். கடற்படையை சேர்ந்த இருவர் இச்சம்பவத்தின் போது காயமடைந்தனர் காட்டிற்குள் தப்பிச்சென்றுள்ள பயங்கரவாதிகளிற் பலர் காயமடைந்திருக்கலாமென்று கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் இச் சம்பவத்தின் போது ஒரு புல்டோசரையும், மற்ருெரு ஜீப் வண்டியையும் தாக்கி சேதப்படுத்தியதாகவும் கடற்படை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஹிங்குராக் கொடையில் கடற்படையினர் நடத்திய தேடுதலில் கைக்குண்டுகள் துப்பாக்கிகள், சீருடைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

பயங்கரவாதிகள் பாவித்து வந்ததாகக் கூறப்படும் நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த ஐந்து தொன் வண்டியும், விவசாய இலாகாவின் லான்ட்ரோவர் ஒன்றும், நீர்ப்பாசன இலாகாவின் மற்ருெரு வாகனமும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு பொலனறுவை தலைமைக் காரியாலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

### இரத்ததானம்

இரத்ததானம் வழங்குவதற்கு நாட்டின் பல ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன. பாடசாலை உடைமைகளையும் சொத்துக்களையும் காப்பதற்கு அகில இலங்கை ஆசிரியரல்லாத சங்கம் உதவி அளிக்க முன்வந்துள்ளது. பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்டவர்களின் நிதிக்கு இவர்கள் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

### ரகசியத் தகவல்கள்

பயங்கரவாதிகளினுல் துன்புறுத்தப்பட்ட அல்லது பயமுறுத்தப்பட்டவர்கள் இவர்களின் நடவடிக்கைகளினுல் வசதியீனம் அடைந்தவர்கள் பயங்கரவாதிகள் பற்றி விஷயங்கள் தெரிந்தவர் எழுத்து மூலமாக தபால் பெட்டி இல: 1511 கொழும்பு, என்ற விலாசத்திற்கு அறிவிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் பற்றி தகவல்களை நேரில் கொடுக்க விரும்புவோர் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை கொழும்பு தேஸ்ரன் வீதியிலுள்ள ஸ்ரேயஸ் கனிஷ்ட பாடசாலைக்குச் சென்று அங்குள்ள அதிகாரியிடம் தகவல்களைக் கொடுக்கலாம். இத்தகவல்கள் அந்தரங்கமாக வைக்கப்பட்டிருப்பதோடு இக்குழுச் செயலாளர் இத்தகவல்கள் பற்றி ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுப்பார்

### பொய்யான செய்தி

கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் ராணுவத்தினரால் கொல்லப்பட்டனர் என்ற பி. பி. சி.யில் ஒலிபரப்பான செய்தி முற்றும் பொய்யானது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன ஊழியர்கள் தொடர்ச்சியாக இருபத்திநாலுமணி நேரமும் கடமையாற்றி வருவதாக ரசாயன கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### புனர்வாழ்வு

கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் உள்ள பயங்கரவாதிகளின் புனர்வாழ்வு பற்றி குழு ஒன்று ஆலோசனைசெய்து வருகின்றது.

### படையினருக்கு உதவி

கஷ்டமான பகுதிகளில் கடமையாற்றும் பொலிசார் மற்றும் ஆயுதப் படையினருக்கு இலகுவாக கிடைக்க முடியாத பொருட்களைக் கொடுத்துதவுவதற்கான ஏற்பாட்டை பிரதமர் செய்துள்ளார்.

தேயிலை, கோப்பி, சீனி சாக்லட், பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்களைக் கொடுத்துதவுமாறு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இம்முறை வெசாக் தினத்தின் போது பொலிசாருக்கும் ஆயுதப் படையினருக்கும் உணவுப் பொருட்களைக் கொடுத்து வேண்டிய உதவிகளைச் செய்யுமாறும் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 22ம் திகதி 343 வது சுவீப் சீட்டிழுப்பு

கோட்டை செவ்

இம்மாதம் 12ம் திகதி மாலை மஹாரகமையில் வைத்து தேசிய லொத்தர் சபையின் 343வது சுவீப் சீட்டிழுப்பு இம்மாதம் 22ந் திகதி காலை 11 மணிக்கு கொழும்பிலுள்ள லொத்தர் சபையின் காரியாலயத்தில் வைத்து இழுக்கப்படும் என்று நேற்று லொத்தர் சபை அறிவித்தது இப்போது விற்பனையிலிருக்கும் 343வது சுவீப் டிக்கட் 22-ம் திகதி காலை 11மணிவரை விற்பனைக்கு செல்லுபடியாகும்

## ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், செவ்.

வடமாநிலத்திலுள்ள பாடசாலை அதிபர்கள் தத்தம் பாடசாலை ஆசிரியர்களுக்கான இம்மாத சம்பளங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏதும் கஷ்டம் இருப்பின் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு வடமாநிலக் கல்வித் திணைக்கள கணக்காளர் அறிவித்துள்ளார்.

## "சீனாவுக்கும் இலங்கைக்கும் நட்புறவு கெடாது"

கோட்டை, செவ்வாய்

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த கட்டிடத்துக்காக கொண்டுவரப்பட்ட பொருட்கள் சந்தேகத்துக்குரியன வென்று வானொலி ஒன்றின் மூலமாகவும் பத்திரிகை ஒன்றிலும் வெளிவந்த செய்தி ஆதாரமற்றதென்றும் மக்கள் சீன அரசுக்கும் இலங்கை அரசுக்கும் மிடையிலான நட்புறவைக் கெடுத்தற்கான செய்தி இது வென்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது

மக்கள் சீனத்திலிருந்து பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டப அமைப்புக்காக கொண்டுவந்த பொருட்கள் தகுந்த பரிசிலனையின் மேலேயே கையேற்கப்பட்டனவென்றும் அரசாங்கம் விவரித்துள்ளது.

### ஆசிய அபிவிருத்திக்கு இலங்கையின் நிதி உதவி

கோட்டை, திங்கள்

ஆசிய தொழில் நுட்ப அபிவிருத்திக்கு இலங்கை தனது பங்காக ஒரு லட்சம் ரூபாவை வழங்கவிருக்கிறது இத்தகவலை நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இம்மாதம் 15-ந் திகதி சிங்கப்பூரில் நடந்து முடிந்த ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் 4-வது மகாநாட்டிற்கு அனுப்பி வைத்த செய்தியில் தெரிவித்திருக்கிருர்.

இந்த உதவி இலங்கையின் தொழில் நுட்ப அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர்களில் ஒருவராக இலங்கையைச் சேர்ந்த திரு. வில்லியம் தென்னக்கோன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் இவர் 1971 முதல் 1973 வரை பதவி வகிப்பார்.

### மகாநாடு ஒத்திவைப்பு

உடுப்பிட்டி, திங்கள்

தமிழ்க்கூட்டுறவுப் பரிசோதகர்களின் சம்பள உயர்வு, சிங்களத் தேர்ச்சி, தரம் ஆகிய பிரச்னைகளை முன்வைத்து அடுத்த மாதம் 8-ம் திகதி நடைபெறவிருந்த அகில இலங்கைக் கூட்டுறவுப் பரிசோதகர் கழகத்தின் வருடாந்த மகாநாடு அவசரகால நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சீன கோஷ்டியின் இலங்கை விஜயம் ரத்து

கோட்டை, ஞாயிறு

இலங்கைக்கு விஜயஞ் செய்யவிருந்த செஞ்சீன டேபிள் டெனிஸ் கோஷ்டி தனது இலங்கை விஜயத்தை கைவிட்டுள்ளது சர்வதேச டேபிள் டெனிஸ் சுற்றுப் போட்டி முடிவடைந்த பின்னர் இங்கு விஜயஞ்செய்யவிருந்தது இக்கோஷ்டி. சர்வதேச சாம்பியனாகளான செஞ்சீன டேபிள் டெனிஸ் கோஷ்டி இலங்கைக்கு விஜயஞ்செய்யவிருந்தது இதுவே முதல் தடவையாகும்.

இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக இது கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

### செனட்சபை ஒத்திவைப்பு

கோட்டை, திங்கள்

செனட்சபை நேற்றுப் பிற்பகல் 2-30 மணிக்குக் கூடி மே மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### 24 மணிநேர விமானசேவை

கோட்டை செவ்

கல்லோயா, மட்டக்களப்பு திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு 24 மணிநேர தொடர்ச்சியான விமான சேவை நடைபெறும் என்று

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சபையின் அடுத்த மேயர் யார்?

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய முதல்வர் இம்மாதம் 21ம் திகதி காலை 10-30 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுவார்.

துரையப்பா கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரே மாநகர முதல்வராக தெரிவுசெய்யப் படுவார் என மாநகரசபை வட்டாரங்களில் பேசப்படுகிறது.

துரையப்பா கோஷ்டியினரும், எதிர்க்கோஷ்டியினரும், நேற்றுக் காலை முதல் ஆதரவு திரட்டுவதில் ஈடுபட்டிருந்தனர்.

புதிய முதல்வர் கடந்த தடவைபோல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் ஒருசாரார் விரும்புகின்றனர்.

சகல வேலைகளையும் அந்தந்த இலாகா தலைவர்களிடம் ஒப்படைத்துவிட்டு வரி விறுப்பாளரிடமிருந்து வரும் புகார்களை மட்டும் மேயர் விசாரணை செய்து அதனைத் தீர்க்க முயற்சி எடுத்து வந்தால் மேயரை ஏற்றி இறக்கும் படலம் ஒழிந்துவிடும் என்று மாநகரசபை உறுப்பினரான திரு கே. எஸ். நடராசா நமது நிருபரிடம் தெரிவித்தார். இந்த முறையில் நிர்வாகம் நடைபெற்றால் ஊழல்கள் முற்றாக ஒழிந்து விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை முன்னாள் மேயர் ஒருவர் மட்டுமே தனது ஆதரவைத் தம்மிடம் கேட்டிருப்பதாகவும் அவருக்கே ஆதரவளிக்கப் போவதாகவும் சபை உறுப்பினரான திரு வி. கே. இராஜரத்தினம் தெரிவித்தார்.

முதல் 6 மாதத்திற்கு திருமதி அந்தோனியா சுவாமிநாதரை மேயராக்கி அதன்பின் துரையப்பா கோஷ்டியை சேர்ந்த மற்றொருவரை மேயராக்குவதற்கான சுன்னான் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றுவருவதாகவும் ஓர் உறுப்பினர் கூறினார்.

தமிழ்க் கட்சிகளைக் கொண்ட தமிழர் ஒற்றுமை முன்னணியும் யாழ். மேயர் தெரிவில் அக்கறை காட்டி வருவதாகவும் ஒற்றுமை முன்னணி சார்பில் ஒருவரை மேயராக்க முயற்சி எடுக்கப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

— —

## ஆலய உற்சவம்

தாவடி, திங்கள்

தாவடி ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 26ந் திகதி, கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் விழா நடைபெற்று, தேர்த் திருவிழா மே மாதம் 9ந் திகதியும், தீர்த்தத் திருவிழா சித்திராபூரணையாகிய 10ந் திகதியும் நடைபெறும்.


**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
காலை 10-30, பி.ப 2-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**கலங்கரை விளக்கம்**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 10-00, 1-30 மட்டும்
நாகேஷ் - கே. ஆர். விஜயா
நடித்த
**சர்வர் சுந்தரம்**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 9-30, 1-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**அன்பளிப்பு**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
காலை 10 30 பி ப 1-30
ரவிச்சந்திரன் - பாரதி
நடித்த
**தங்கத்தம்பி**

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 10-30a.m
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME
தினசரி பி. ப. 1-30
சிவாஜி-சௌகார் ஜானகி
நடித்த
**லக்ஷ்மி கல்யாணம்**

REGAL - Jaffna
Daily 10-15a m. 1-30 p.m.
Fernando Sancho
in
OUR AGENT SLIT


## அறிவித்தல்

1971-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30-ம் திகதி காலை 10 மணி வரையும் தெல்லிப்பளை கிராமசபைத் தலைவரால் கீழ் காட்டப்படும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் 28-4-71-ந் திகதி காலை 12 மணி வரையும் கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூ. 25/-ம், கேள்விப்பத்திரப் பணம் ரூ. 10/-ம் செலுத்திக் கிராமசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். வேறு விபரங்கள் தெல்லிப்பளை கிராம சபையில் அல்லது யாழ்ப்பாணம் உ. ஆ. உ. ஆணையாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

### வேலைகளின் விபரங்கள்

1. அன்னம்மார் கோவில் வீதி (2-ம் பகுதி)
2. சாயுடை ஒழுங்கை.
3. செம்பொன் வாய்க்கால் ஒழுங்கை.
4. கீரிமலைக் கேணி பாதுகாப்பு அறை.

ம. சிதம்பரநாதன்,
தலைவர்,
கிராமசபை,
தெல்லிப்பளை.

கிராமசபை அலுவலகம்,
தெல்லிப்பளை,
15-4-71. 3246

## உபநயன அழைப்பு

அன்பரீர்,

நிகழும் சித்திரை மாதம் 21-4-71 புதன்கிழமை காலை 7 மணி முதல் 9 மணி வரையுள்ள சுபவேளையில் வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதம குருவாக இருந்த அமரர் பிரம்மஸ்ரீ கணபதி சாமிக்குருவின் கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி புருஷோத்தமனுக்கு பூணூல் தரித்தல் வைபவம் நடைபெறும். இவ்வழைப்பை சுற்றமித்திரர்கள் ஏற்றுக் கொள்ளவும். திருமதி கணபதிசாமிக்குரு, வல்லிபுரக் கோவில். 2761

## பண்டத்தெருப்பு கிராமசபை கேள்விவிளம்பரம்

பண்டத்தெருப்பு கிராம சபைத் தலைவரால் கீழ்க்காணும் வேலைகட்கு 1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 30-ம் திகதி காலை 9.30 மணி வரை சீல்வைத்த கேள்விப் பத்திரங்கள் தனித்தனியே ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்கிரயமாக ரூபா 10/-ம் கட்டுப் பணமாக ரூபா 50/-ம் கட்டியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் 29-4-71 மாலை 2-00 மணிவரை வழங்கப்படும். இதற்கான ஏனைய விபரங்கள் யாவும் கிராமசபைக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விப்பத்திரக் கிரயம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

### வேலையின் விபரம்

1. இளவாலை கென்றீஸ் ஒழுங்கை திருத்தம்.
2. மாதகல்விளான்றோட் திருத்தம்.
3. மாசியப்பிட்டி ஒழுங்கை.

சி. சி. கனகசபாபதி ஜே. பி.
தலைவர்
கி. ச. பண்டத்தெருப்பு.
3247

## தேவை

மின்விசையால் இயங்கும் லோன்றியில் றைகிளீனிங் வேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. மூஷிகா இன்டஸ்றீஸ் லிமிட் இருபாலைவீதி, கோண்டாவில். 2473

தாவடி, திங்கள்

தாவடி வேம்படி முருகன் ஆலயத்தில் புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் ஆறுமுகசாமி முத்துக்குமாரசுவாமி மூர்த்திகளுக்கான புதிய மண்டப வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. வெகுவிரைவில் இவ் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படும்.


**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப.1-30
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

**வின்ஸர்**
(யாழ்ப்பாணம்)
மறு அறிவித்தல் வரை தினசரி
காலை 10-00
பி. ப 1. 15
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
**வா ராஜா வா**

-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30 பி.ப. 1-30
எம். ஜி. ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
மனோகர், அசோகன், ஆனந்தன்
நாகேஷ்; சுந்தரராஜன்
நடித்த
விநாயகா பிக்சர்ஸ்
**மூன்றெழுத்து**
(மர்மச்சித்திரம்)

**இதோ! றோமியா பரவசமூட்டும் ஓர் புதிய பவுடர்!**
பசுமையும் நீடிக்கும் சுகந்தமும் கொண்ட றோமியா,
விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.
மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் றோமியா தடவுக!




சிறப்பறிய, இன்றே ஒரு டின்
**றோமியா**
வாங்குக!
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.
விலை. ரூ. 2/35




ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய அரபுக் கூட்டமைப்புக்கு சோவியத் யூனியன் வரவேற்பு

## சிங்கப்பூர், மலேஷிய பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு கண்டனம்

மாஸ்கோ, ஏப்ரல் 19

இஸ்ரேலின் பிடியிலிருந்து அரபுப் பிரதேசங்களை விடுதலை செய்யும் நோக்கம் கொண்டதாகவே புதிய அரபு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என சோவியத் யூனியன் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

சிரியா, லிபியா, எகிப்து ஆகிய மூன்று நாடுகளும் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட கூட்டமைப்பை மொஸ்கோவும் வரவேற்றுள்ளது.

அண்மையில் ஐந்து சாம்ராஜ்ய நாடுகள்கூடி சிங்கப்பூர், மலேசியா ஆகிய இரு நாடுகளை பாதுகாப்பதுபற்றி செய்துகொண்ட புதிய உடன்படிக்கையை சோவியத்செய்தி ஸ்தாபனமான பிராவ்டா குறைகூறியுள்ளது.

இந்த அரபுக்கூட்டமைப்பு சூயஸ்கால்வாய் திறப்பது பற்றிய விஷயத்தில் இஸ்ரேல் விதித்த புதிய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாது எனச் சொல்லப்படுகிறது. இந்தக் கூட்டமைப்பு மேற்காசியப் பிரச்னைக்கு ஓர் தீர்வை ஏற்படுத்த உதவாதென இஸ்ரேலியப் பத்திரிகைகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலை அழித்துவிட வேண்டுமென்ற சிரியாவினதும், லிபியாவினதும் கொள்கைகளுக்கு எகிப்திய ஜனாதிபதி சதாத்தின் மிதவாதக் கொள்கை எவ்விதத்திலும் குறைந்ததல்ல என இஸ்ரேலிலிருந்து வெளிவரும் இன்னோர் பத்திரிகை எழுதியுள்ளது.

கல்கத்தா

## பாக். துணைத் தூதரகத்தில் வங்காள தேசியக் கொடி

லண்டன், ஏப். 19

ஜேர்மனியில் ஹிட்லர் செய்த கொடுமையிலும் பார்க்க, இனக்கொலையை கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தானியர் செய்துவருவதாக பிரிட்டிஷ் தொழிற் கட்சி அங்கத்தவர் பிராக்வே பிரபு கண்டித்துள்ளார்.

அவர் மேலும், தேசிய சுதந்திரத்திற்காகப் போராடிவரும் மக்கள்மீது காலனி ஆதிக்கமுறையில் படுகொலைகள் அங்குநடை பெறுகின்றன. வியட்நாமில் நடக்கும் கொடுமைகளைவிட படுபயங்கர நிகழ்ச்சிகள் அங்குநடப்பதாக லண்டனில் நடைபெற்ற தேசிய விடுதலை காலனி ஆதிக்கவிடுதலை மகாநாட்டில் பேசும் அவர் தெரிவித்தார்.

இனக்கொலையைக்கண்டித்தும், அங்கு அமைதி ஏற்பட வழிசெய்ய பிரிட்டிஷ் அரசைக் கோரியும் இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கு பிரிட்டிஷ் ஆயுத உதவி அளிப்பதை நிறுத்த வேண்டுமென்றும் வங்காள தேசத்தை தனிநாடாக அங்கீகரிக்கவேண்டுமென்றும், அம்மாநாட்டில மேலும் தீர்மானிக்கப்பட்டது.

**பவுல்ஸ் கருத்து**

உணவு, வைத்திய உதவிகளைத் தவிர ஏனைய உதவிகளை பாகிஸ்தானுக்கு அளிப்பதை பிரிட்டிஷ் அரசு நிறுத்த வேண்டுமென இந்தியாவுக்கான முன்னாள் பிரிட்டிஷ் தூதுவர் திரு. செஸ்டர் பவுல்ஸ் நியூயோர்க்ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர், இந்தியா பாகிஸ்தான் உள் நாட்டுவிவகாரங்களில் தலையிடுவதாகச் சாட்டப்படும் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

**பிரிட்டன் ஆலோசனை**

அண்மையில் கூடவிருக்கும் மகாநாடொன்றில், பிரிட்டனும், ஆறுபொதுச் சந்தை நாடுகளும் கிழக்கு வங்காள நிலைமை பற்றி ஆராயவிருப்பதாகத்தெரிகிறது. மகாநாட்டு நிகழ்ச்சிநிரலில் இவ்விஷயமும் சேர்க்கப்பட்டுள்ளது பிரிட்டனின் வேண்டுகோளின்பேரிலேயேஇவ்விஷயம் ஆலோசிப்பதற்கு எடுக்கப்படுவதாகஅறியப்படுகிறது.

லண்டனில் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் பிரிட்டிஷ் பிரதமர் இல்லத்தின் முன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். பங்களா தேசை தனிநாடாக அங்கீகரிக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரிடம் கையளித்தனர்.

கல்கத்தாவிலுள்ள பாகிஸ்தான் துணைஹைகமிசன் காரியாலயத்தில் பங்களா தேஷ் கொடி பறக்கவிடப்பட்டதாக பி. ரி. ஐ. தெரிவித்துள்ளது.

இத்தூதரகத்தில் பாகிஸ்தான் துணை ஹைகமிஷனர் ஹுசெயின் அலி இக்கொடியை ஏற்றிவைத்தார். இத்தூதரகம் இனி வங்காளத்தினரின் தூதரகமாக இயங்குமெனவும் மேற்குப் பாகிஸ்தானியர் கிழக்கு வங்காளத்தில் நடத்தும் இனக்கொலை படுமோசமானதாகுமென அவர் தெரிவித்ததோடு, இத்தூதரகத்தைச் சேர்ந்த மேலும் மூன்று அதிகாரிகளும் தம்மை ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு வங்காளத்தில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்ட காலந்தொட்டு இத்தூதரகத்தின் முன்பலத்த பொலிஸ்காவல் போடப்பட்டிருந்தது.

டாக்காவில் மத்திய தகவல் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும், காணாமற்போனவர்கள்பற்றிய தகவல்களை இங்கு கொடுக்குமாறும் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது. இச்செய்தி கிழக்கு வங்காளத்தில் நடந்த படுகொலைகளை நிரூபிப்பதாக இந்திய அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறதாம்.

டாக்காவிலும் சிட்டாகாங் பகுதியிலும் நியமிக்கப்பட்ட சில அதிகாரிகள் [illegible] பொறுப்பை சரிவரச் [illegible] வில்லை என்பதற்காக பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

கிழக்கு வங்காளத்தில் சலூட்டிகார்விமான நிலையம் என ஒருவிமான நிலையம் இல்லை என்று பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது. ஆனால் இவ்விமான நிலையம் 2-வது மகாயுத்தத்தின் போது பிரிட்டிஷ் அரசினால் கட்டப்பட்டதெனவும் இதனைப் பின் பாகிஸ்தான் அரசு சீர்திருத்தியதாகவும் தெரிவித்த வானொலி இச்செய்தி ஷேக் முஜிபுர் ஆதரவாளர்களின் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலினால் ஒடு பாதைகள் அழிவுற்றன என்ற செய்தியை ஊர்ஜிதப்படுத்துவதாக தெரிவித்தது.

இந்தியா பாகிஸ்தான்விவகாரங்களில் தலையிடுவதாக பாகிஸ்தான் சாட்டிய குற்றச்சாட்டை ஜப்பான் பத்திரிகையான நேர நியூசிங் புங் என்னும் பத்திரிகை கண்டித்து இந்திய அரசினதும் மாஸ்கோவினதும் தலையீடு, மனிதத்தன்மையில் எழுந்த தார்மீக உணர்வே என எழுதியுள்ளது.

கிழக்கு வங்காளத்தில் நடைபெறும் இனக்கொலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரத்தான் பாடுபடப்போவதாக அமெரிக்க வெளிநாட்டு நிதிஉதவிக் கமிட்டியின் உபதலைவர் வில்லியம் ரோஜர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறும் ஆக்கிரமிப்பிலிருந்து பாகிஸ்தானைப் பாதுகாத்துக்கொள்ள அளிக்கப்பட்ட அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தான் தனது [illegible] பாவிப்பதையிட்டு அவர் கவலை தெரிவித்தார்.

## பயிற்சிக்காக 2 இலங்கையர் தெரிவு

லண்டன், ஏப். 19

இலங்கை அரசாங்கத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் பிரிட்டனில் ஏற்றுமதி வர்த்தகம் பற்றிய பயிற்சித் திட்டமொன்றைப் பயிலவென ஏப்ரல் 27-ம் திகதி பிரிட்டனுக்குப் புறப்படுகின்றனர், திரு. முருகேசு, திரு. என். ஆர். மீமதும் ஆகிய இருவரும் மன்செஸ்டர் சர்வகலாசாலையில் உள்ள ஹொலிரொய்ட் கல்லூரியில் பயிற்சியைப் பெறுவார்கள்.

இவர்கள் இருவரது பயிற்சியும் கொழும்புத் திட்ட, நுண்தொழில் கூட்டுறவு திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கைத்தொழில் துறையிற பொதுமக்கள் முக்கியபங்கு வகிக்க வேண்டுமென்ற இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைக் கிணங்கவே இவ்விரு அதிகாரிகளும் பிரிட்டனுக்குப் பயிற்சிக்கென அனுப்பப்படுகின்றனர். இவர்கள் பயிற்சிபெறச் செல்லும் ஹொலிரோயிட் கல்லூரியின் ஏற்றுமதிமுன்னேற்றத் திட்டமானது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் தேவைகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## பெயரை மாற்றுக

அரியாலை, திங்கள்

புங்கங்குளம் புகையிரத நிலையத்தை விரிவுபடுத்தி, அதை அரியாலை புகையிரத நிலையம் என மாற்றவேண்டும் என்று கோரும் தீர்மானம் அரியாலை வாலிபர் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

## இனிக்கப்பேசி அடித்தனராம்

தாவடி, திங்கள்

இளைஞர் ஒருவரை அன்பாக அழைத்து இனிய வார்த்தைபேசி, பின் மணல் நிறைக்கப்பட்ட போத்தலினால் அடித்துக் காயப்படுத்தினராம் மற்றொருவர். இச்சம்பவம் கொக்குவில் மேற்குப் பகுதியில் நடைபெற்றது.

பலத்த காயங்களுக்குள்ளான அவ் இளைஞன் உடன் யாழ் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## இரு பகுதிகளை பாக். படைகள் கைப்பற்றின

புதுடில்லி, ஏப். 19

கிழக்கு வங்காளத்தின் மேற்குப் பகுதியிலுள்ள சுவாடங்காப் பகுதியை முஜிபுர் ஆதரவாளர்கள் மீண்டும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக எல்லைக்கப்பாலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாக இந்திய வானொலி தெரிவித்தது.

இந்தப் பகுதியை முஜிபுர் ஆதரவாளர்கள் கைப்பற்றியதும் இவ்விடத்தை விட்டுப் பின்வாங்கிய பாகிஸ்தான் துருப்புக்களை வழிமறித்து முஜிபுர் ஆதரவாளர்கள் கடுமையாகத் தாக்கினர் வடமேற்குப் பகுதியில் இரு பகுதியினருக்குமிடையே கடும்சண்டை நடந்து வருகிறதென அவ் வானொலி மேலும் தெரிவித்தது.

சேக் ஆதரவாளரிடமுள்ள ஆர்கவுரா ரயில் நிலையத்தைக் கைப்பற்றுவதற்காக இரு பகுதியினருக்குமிடையே சண்டை நடைபெறுவதாகவும், தெரிவித்த அவ் வானொலி. பிராம்மன் பாரியா, ஹவுரா ஆகிய இடங்களில் கடும் சண்டை நடைபெறுவதாகவும், இப்பகுதிகளில் நீராவி இயந்திரம், ஹெலிகாப்டர் மூலம் புதிய துருப்புக்களை பாகிஸ்தான் இராணுவம் மேலும் கொண்டுவந்து இறக்குவதாகவும் எல்லைக்கப்பாலுள்ள அகில இந்திய வானொலி நிருபர் அறிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிப்பதாவது; ஆக்வுரா, பிராம்மன் பாரியா பகுதியில் சண்டை நடைபெறுவதாகவும் அங்கு பாகுஸ்தான் துருப்புக்கள் இயந்திரத்துப்பாக்கிகள், கனரகப் [illegible] பீரங்கிகள் கொண்டு தாக்குவதாகவும் இத்தாக்குதல்களினால் அப்பகுதியிலிருந்து பெரும் புகைமண்டலம் எழும்புவதை இந்திய எல்லை ஓரங்களிலிருந்து காணக்கூடியதாக இருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

இப் பகுதியில் இராணுவத்தினர் நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று குவிக்கின்றனராம்.

கிழக்கு வங்காளப் பகுதிகளிலுள்ள வயல்களை அழிப்பதற்காகவும், அந் நிலங்களில் எதிர்காலத்தில் எவ்வித பயிரும் செய்யமுடியாத வகையில் அவைகளை கெடுப்பதற்கும் எரி ரசாயனங்களை அப்பகுதிகள் மீது பாகிஸ்தான் இராணுவத்தினர் தூவி வருகின்றனராம்.

ஷேக் முஜிபுர் ஆதரவாளர்களிடமிருக்கும் கடுஞகுளி மின்சாரத் திட்டப் பகுதிகள் மீது பாகிஸ்தான் இராணுவம் குண்டுவீசித் தாக்கியதாம் பாகிஸ்தான் இராணுவத்தின் ஒரு பகுதியை லக்சம் பகுதியில் ஷேக் ஆதரவாளர்கள் கடுமையாகத் தாக்குகின்றனர்.

**கண்டனம்**

கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தானியர் செய்துவரும் இனக் கொலையைப் பலர் மேலும் கண்டித்துள்ளனர்.


ஐ. நா. சபையில் காலனி ஒழிப்பு விசேட கமிட்டியைக் கூட்டவேண்டுமென்றும், அவர்கள் கிழக்கு வங்காளத்திற்கு விஜயஞ்செய்து அங்கு நடக்கும் இனக்கொலையைப் பார்வையிடவேண்டுமெனவும் வி. கே. கிருஷ்ணமேனன் கருத்துத் தெரிவித்தார்

கிழக்கு வங்காளத்தை இந்தியா அங்கீகரிக்காவிட்டால், மேற்கு வங்காளத்தில் பாரதூரமான விளைவுகள் ஏற்படுமென மேற்கு வங்காள முன்னாள் பொலிஸ் அமைச்சரும், மார்க்ஸீயக் கம்யூனிஸ் கட்சித் தலைவருமான திரு ஜோதிபாசு இந்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் உள்விவகாரங்களில் தலையிடவில்லையென்றும், அது தனது தார்மீக ஆதரவையே தெரி

(4-ம் பக்கம் பார்க்க)


SONY®
2R-29




ஸோனி பாக்கெட் ட்ரான்சிஸ்டர் ரேடியோ
சிடில்ஸ் சினிரேடியோ
9, 10, கொன்சிஸ்டரி கட்டிடம்,
பூந்தோட்ட வீதி, கொழும்பு 11.
தொலைபேசி 27311
கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, அம்பலாந்தோட்டை, பம்பலப்பிட்டி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பச்சோந்தி பல்வேறு நிறங்களில் தோற்றமளிக்கும் ஒருசில வேளைகளில் நிறமே இல்லாதும் இருப்பதை மனிதன் அறிவதுபோல இறைவனுடைய ரூப அரூப தோற்றங்களை ஞானி ஒருவனே அறிவான்.

—பரமஹம்சர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை [illegible]
7-ந் திகதி ( 20-4-71)


## மக்கள் ஒத்துழைப்பு

தீவைத்தல், பயங்கர ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்துவது, பொலிஸ் இராணுவம் ஆகிய பாதுகாப்புப் படை அங்கத்தவர்களைப் படுகொலை செய்வது மறைந்திருந்து தாக்குவது போன்ற பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த இளம் பயங்கரவாதிகளின் கொரில்லா யுத்தம் பெருமளவு அடக்கப்பட்டு விட்டது கண்டு இந்த நாட்டின் நலனில் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்கள் ஆறுதல் அடைவர். முன்னர் ஒரு தடவை இலங்கைக்கு அனுமன் தீ வைத்தான் என்று இராமாயணம் கூறுகிறது. இன்றைய இளம் பயங்கரவாதிகள் கொரில்லா போர்முறையில் நன்கு பயிற்சிபெற்றிருப்பது இப்போது தெளிவாகியிருப்பதால் ஆபத்து முற்றாக நீங்கி விடவில்லையென்பதை உணர்ந்து இனியும் எச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டுமென்பதை மறந்துவிடக்கூடாது.

படித்து முடித்ததும் மின்விசிறியின் கீழ் நாற்காலியில் அமர்ந்து மாதாமாதம் சுளையாகச் சம்பளம் வாங்கலாமென்று கனவுகண்டுவந்த இளைஞர்கள், சிறுபிள்ளைகளானாலும் வேளாண்மை செய்து பார்க்கலாமென முனைந்திருந்தால் இந்த அழிவுப்பாதையில்சென்று பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டு "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது" என்ற பழமொழியை மெய்யாக்கி இருக்கமாட்டார்கள். "வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்" என்றபடி இப்போது இந்த இளம் பயங்கரவாதிகள் தாம் விதைத்ததை அறுவடை செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

இதற்காக இந்த இளைஞர்களையும் இளம் சமுதாயத்தினரையும் தேசத்துரோகிகள் பட்டம்கட்டி அவர்களை அழித்துவிடவேண்டுமென்று யாரும் விரும்புவார்கள் எனச் சொல்லமுடியாது. இதே சமயம் ஒன்றுமே தெரியாத இந்த அப்பாவி இளைஞர்களைச் சிலர் தவருக வழிநடத்திவிட்டார்களே யென்று இந்த இளைஞர்களைச் "செல்லங்கொஞ்ச வேண்டும்" என்றும் யாரும் சொல்லத் துணியமாட்டார்கள்.

இந்தநாட்டின் இளைஞர்களுக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதைப் பிரதமர் முதல் மற்றும் அரசியல் தலைவர்களும் அறிந்திருக்கின்றனர். இவற்றுக்குஎப்படித்தீர்வு காண்பது என்பதிலும் யார் தீர்வுகாண்பது என்பதிலும் தான் வேறுபாடு இருந்துவந்திருக்கிறது.

இனியும் இதில் காலங்கடத்துவது சரியாகாது. இளைஞர் பிரச்சினைதான் நாட்டின் மிகமுக்கியமான முதல் நம்பர் பிரச்சினை என்பதை உணர்ந்து அந்தப் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகாண முனைவதன் மூலமே இளைஞர்கள் தவருனவர்களின் கைகளில் சிக்கி தீயவழிகளில் செல்லாமல் தடுக்க முடியும் என்பதை ஆட்சிபீடத்திலிருப்பவர்கள் மட்டுமல்ல நாட்டின் நலனில் அக்கறையுடைய அனைவருமே உணர்ந்துகொள்ளவேண்டியது அவசியம்.

நாட்டைப் புனரமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கென உயர் அதிகாரக் குழுவொன்றை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நியமித்திருக்கிறார். இக்குழுவுக்கு நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைவர். பயங்கரவாத இயக்கம் எப்படி ஆரம்பமானதென்பதை ஆராய்ந்து அதன் அடிப்படைக் காரணத்தையும் கண்டுபிடித்திருப்பவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா. அவரது இந்தப் பணி சாதாரண விஷயமல்ல. இளைஞர்கள் சிலரின் போதனைகளுக்கு நன்கு செவிசாய்த்ததே இந்தப் பயங்கரவாத இயக்கம் தோன்றக் காரணம் என்பது திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் ஒரு கருத்து. அதாவது இளைஞர்கள் கேட்பார்புத்தியைக்கேட்டிருக்கிறார்களென்பதுதான்!

இதன்படி பார்த்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு (நாடும் மக்களும்) புனர்வாழ்வளிப்பது மட்டுமல்ல இளைகர்ளுக்கு மீண்டும் நல்ல படிப்பூட்டவேண்டியதும் இந்த உயர்தரக் குழுவை எதிர்நோக்கியுள்ள அவசர விஷயமாகும்.

கேட்பார் புத்தி கேட்பவர்களை நல்ல வழியில் திருப்புவதற்கு நல்ல கல்வியை மீண்டும் அளிக்கவேண்டியது அவசியமே! நாட்டின் எதிர்காலம் இளைஞர் கைகளிலேயே தங்கியிருக்கிறது. அரசாங்கத்தை மாற்றுவதற்கும் அவர்களுக்கு உரிமைஇருக்கிறது. ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்படுத்துவது மக்களின் விருப்பத்துடன் செய்யவேண்டிய காரியமேயொழிய, மக்கள் சமுதாயத்தையே அழித்தொழிக்கும் வன்முறையால் ஆட்சி அதிகாரத்தை மாற்றும் முயற்சியை எந்த அரசாங்கமும் மட்டுமல்ல, மக்களுமே அனுமதிக்கமாட்டார்கள். இந்த உண்மையை இளைஞர்களுக்குச் சரியாக உணர்த்தவேண்டிய பெரும் பொறுப்பும் கடமையும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமே பெருமளவில் உண்டு. அரசியல் தலைவர்கள் சமய, சமூகத் தலைவர்களுக்கும் இதில் பொறுப்பு இருப்பதும் உண்மைதான். கல்விக்கூடங்கள் பயங்கர இயக்கங்களின் தலைமைக் கூடங்களாக மாறுமலும் வருங்கால சந்ததி பயங்கரமாக மாறுமலுமிருக்க இன்றைய இளைஞர்களுக்கு நற்போதனையளித்து நல்வழி காட்டவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடமும் பெற்றோர்களுடமுமே இருக்கிறதென்பதை மறந்துவிடலாகாது. இந்தத் தேசிய அவசரக் கடமையை நிறைவேற்றுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க முன்வரவேண்டிய சந்தர்ப்பம் இதைவிட வேறு இருக்க முடியாது.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்ரல் [illegible] வெளியிடப்பெற்றது.


இன்று குருபூசை

# அகத்தும் புறத்தும் சிவன்கழல்ஏந்தியசெல்வர்

ஸ்ரீலஸ்ரீ ஈசானசிவாச்சாரியார்



[ஈழத்திலிருந்து தமிழகம் சென்று தமிழும் சைவமும்வளர்த்த பெரியார் வரிசையில் இலக்கணச் சுவாமிகள் என்றழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் முக்கியமானவர். அவர்பிறந்து வளர்ந்த மண்ணிலே தான் 'ஈழநாடு' மலர்ந்திருக்கிறது. இன்று சுவாமிகளின்குருபூசைத் தினமாகும்.]

சைவ சித்தாந்த சாஸ்திரங்களிற் சிறந்து விளங்குவதும் ஆராய்ச்சி, அநுபூதி என்னும் இருவகை ஞானிகளும் அநுபூதி ஞானத்தையே விதந்தெடுத்தோதுவதுமாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்ற அரிய சித்தாந்த சாஸ்திரத்தை ஒரு சிவஞானச் செல்வர் அருளிச்செய்த உரையுடன் அதனைத்தேடிப் பிரதிசெய்து வைத்திருந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரான சுவாமிகளாவர். இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சன்ம பூமியாகவுடையர். இவர் தமது பதினொன்காமாண்டிலே தமிழகத்துக்கு வந்து ஸ்ரீ செல்லப்பசுவாமிகள் சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீஇராமலிங்க சுவாமிகள் முதலிய பெரியோர்களிடத்தே இலக்கண இலக்கிய பயிற்சி பெற்று, சூரியனுர் கோயிலாதீனம் ஸ்ரீலஸ்ரீமுத்துக்குமரதேசிகர் அவர்கள் திவ்ய சமுகத்தே சமய, விசேட நிர்வாண தீக்ஷையும் சைவ சந்நியாசமும் பெற்றவர்கள் அகத்தும் புறத்தும் சிவபெருமானைப் பூசிக்கும் நியமமும் பூண்டவர்கள். சைவ சாஸ்திரப் பயிற்சியிலும் போதனையிலும் சிறந்து விளங்கினவர் ஸ்ரீமாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச் செய்த சிவஞான மாபாடியத்தைச் செப்பஞ் செய்து திருத்தமாக அச்சுவாகன மேற்றுவித்தவர்கள். ஸ்ரீசிவாக்கிரயோகிகள் தொகுத்தருளிய கிரியா தீபிகையைச் செப்பமாகச் அச்சிட்டு உபகரித்தவர்கள். சைவ சந்நியாச பத்ததி, தருமை ஆதீனத்து ஸ்ரீகுரு ஞானசம்பந்த பரமாசாரிய மூர்த்திகள் அருளிச் செய்த முத்தி நிச்சயம், அதன் மாபாடியம் முதலிய ஞான நூல்களையும் பரிசோதித்து உதவியவர்கள். பெரிய புராண உரையாசிரியராகிய, சிவக்கவிமணி சைவப் பெரியார் சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கு அருந்துணையாய் நின்று பெரியபுராணப் பேருரைப் பணிக்குச் சித்தாந்த நுண்பொருள்களை ஆங்காங்கே வரைந்தருளிச் சிறப்பித்தவர்கள் இவர்கள் தொகுத்து வைத்திருந்த திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் உரை இப் பெருநூல் ஆகும்.

## விவசாயிகளுக்கும் மீனவருக்கும் எச்சரிக்கை!

கோட்டை, திங்கள் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும்போது மீனவர்களோ விவசாயிகளோ தமது இல்லங்களை விட்டு வெளியேறக் கூடாது என்று அரசாங்கம் நேற்று முன்தினம்விடுத்தவிசேஷ அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

பயிர்ச் செய்கைக்கான வேலைகளுக்கோ, கடலில் மீன் பிடிப்பதற்கோ ஊரடங்கு சட்ட நேரத்தில் செல்லக்கூடாது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவ்வித தீர்மானத்தை அரசாங்கம் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு அரசாங்கம் வருந்தும் தெரிவித்துள்ளது.

டெஸ்ட்

## இந்தியா 324-4

போர்ட் ஆப்ஸ்பெயின் ஏப்ரல் 19

மேற்கிந்தியகிரிக்கட் கோஷ்டிக்கும் இந்தியக் கிரிக்கட் கோஷ்டிக்குமிடையில் இங்குநடைபெறும் 5 வது டெஸ்டின் ஐந்தாவது நாளான நேற்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேரமுடிவில் 4 விக்கட் நஷ்டத்துக்கு 324 ரன்கள் எடுத்திருந்தது. இந்திய ஆட்டக்காரர் 21 வயதான சுனில் கவாஸ்கார் பிரமாதமாக ஆடி ஒரேடெஸ்டில் தொடர்ந்து இரண்டு இன்னிங்ஸிலும் செஞ்சரி போட்டிருக்கிறார் இரண்டாவது இன்னிஸ்ஸில் இவர் 180 ஓட்டங்கள் எடுத்து இன்னும் ஆட்டமிழக்காமலிருக்கிறார். இந்தச்சாதனை மூலம் இவர் உலகப்புகழ் கிரிக்கட் வீரர்கள் பட்டியலில் சேர்ந்து கொண்டுள்ளார்.

மேற்கிந்திய கோஷ்டி தனதுமுதல் இன்னிங்ஸில் 526 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்திய கோஷ்டியின் ஸ்கோர் விபரம் வருமாறு:-

முதல் இன்னியங்ஸ்; 360
2வது இன்னிங்ஸ் 324-4

## இருபகுதிகளை ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துவருவதாகவும் பாகிஸ்தான் முன்னுள் ஹைகமிஷனர் குசெயின் அலி புதுடில்லியில் தெரிவித்தார்.

### 2 பகுதிகள்

[illegible] வசம்

இந்திய எல்லையோரப்பகுதியான கிழக்கு வங்காளத்தின் இரு நகரங்களைப் பாகிஸ்தான் இராணுவம் கைப்பற்றியிருப்பதாகப் பாகிஸ்தான் வானொலி தெரிவித்தது.

## 24மணி நேர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அறிவிக்கப்பட்டது பிரயாணிகள் அந்தந்த இடங்களிலுள்ள விமான நிலையங்களுக்கு பிரயாணத்தை மேற்கொள்ளத்தயாராய் வரும்படி கேட்கப்பட்டுள்ளனர் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் பிரயாணத்தை மேற்கொள்ளவரும் பிரயாணிகள் ஊரடங்குசட்டநேரத்துக்கு முன்கூட்டியே விமான நிலையத்தை வந்தடையவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது

## அனுமதிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு யாழ்ப்பாணப் பகுதி உயர்தரப் பொலிஸ் அதிகாரி கேட்டுள்ளார்.

### சுவரொட்டிகள்

யாழ்ப்பாணப் பகுதியில் தேவையற்றசுவரொட்டிகளை சிலர் ஒட்டிவருவதால் நிலைமையை மேலும் பாதிக்கக்கூடியதாகுமென்றும் பொலிஸ் உயர் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சுவரொட்டிகளை ஒட்டுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கைஎடுக்கப்படுமென்றும்குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி எச்சரித்துள்ளார்.


## மரண அறிவித்தல்

கதிரவேலு முருகேசு

பெரியமாவடி சாவகச்சேரியைச் சேர்ந்த கிடுகு வியாபாரி கதிரவேலு முருகேசு காலமாகிவிட்டார். இவர் இளையதம்பி, அபிராமி; பொன்னுச்சி, சிதம்பரப்பிள்ளை (ஆசிரியர் டிறிபேர்க் கல்லூரி) அன்னம்மா ஆகியோரின் சகோதரருமாவார். ஈமக்கிரிகைகள் இன்று (20-4-71) பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி மயானத்தில் நடைபெறும்.

2613 தகவல்: சிதம்பரப்பிள்ளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org